**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09ம் நாள் செவ்வாய்கிழமை**

**O.S. 47/2020**

பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாகிய DW1–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பஜ்ரூல் ஹக் | தாலுக்கா | : திருவாரூர் |
| த/பெ | : இஸ்மாயில் | கிராமம் | : விஜயபுரம், திருவாரூர் |
| ஜாதி | : | தொழில் | : விவசாயம் |
| சமயம் | : | வயது | : 46/26 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். விஜயபுரம் முஸ்லீம் உறவின் முறை ஜமாத் நிர்வாக சபையின் தற்போதைய தலைவர் என்ற முறையிலும் மேற்படி நிர்வாக சபையின் உறுப்பினர்களான 2 முதல் 6 பிரதிவாதிகளுக்காவும், பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 27.01.2025 தேதிய தமிழ்நாடு வக்ஃபு போர்ட் வழங்கிய ரசீது அசல் **பி.சா.ஆ.1,** ஆகவும்

கடந்த 18.04.2024ம் தேதிய தமிழ்நாடு வக்ஃபு போர்ட் வழங்கிய ரசீது அசல் **பி.சா.ஆ.2,** ஆகவும்

கடந்த 24.06.2024ம் தேதியிட்ட தமிழ்நாடு வக்ஃபு போர்ட் வழங்கிய நிலுவை இன்மை சான்று (No Due Certificate) அசல் **பி.சா.ஆ.3,** ஆகவும்

கடந்த 2020-24 காலத்திற்கு ஜமாத் ஆண்டு வரவு செலவு கணக்கு (எண்ணிக்கை 4) சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.4,** ஆகவும்

கடந்த 17.03.2020ம் தேதியிட்ட திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலர் அழைப்பாணை அசல் **பி.சா.ஆ.5,** ஆகவும்

கடந்த 01.01.2015 முதல் 20.04.2025 வரையிலான காலத்திற்கான வில்லங்க சான்று கணினி நகல் **பி.சா.ஆ.6,** ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

//கூடுதல் ஆணவங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.//

*(பி.சா.ஆ.1, 2 ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்பதாலும் முத்திரை ஏதும் இல்லாததாலும் பெயரில் மாற்றம் உள்ளதாலும் குறியீட தக்கதல்ல எனவும், பி.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்து தொடர்பாக எவ்வித குறிப்பும் இல்லாததாலும் குறியீட தக்கதல்ல எனவும், பி.சா.ஆ.5 ஆவணத்தில் சொத்து விபரம் ஏதும் இல்லாததாலும் குறியீட தக்கதல்ல எனவும் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனைகள் தீர்ப்புரையின் போது பரிசீலிக்கப்படும் என உத்தரவு பகரப்பட்டது).*

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6---** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.06.09 18:31:57 +0530